# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

**ஆணை நாள் 15.07.2026**

**முன்னிலை**

**முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப. (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்.SA 11714/SCIC/2024**

திரு.A.சுரேஷ், த/பெ.L.ஆனந்தன் (லேட்) - மேல்முறையீட்டாளர்
பழைய எண்.36, புதிய எண்.27
திருநாவுக்கரசு தோட்டம், 1வது முட்டு சந்து
கொருக்குப்பேட்டை, சென்னை-600 021
Cell:99412 80824

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் / - பொது அதிகார ஆமைப்பு
காவல் துணை ஆணையாளர்
போக்குவரத்து தெற்கு மண்டலம்
புனித தோமையார் மலை
சென்னை - 600 016.

## ஆணை

| | | |
|---|---|---|
| 1. | **மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு** | **06.07.2024** |
| 2. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 31.07.2024 |
| 3. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 05.08.2024 |
| 4. | மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 03.09.2024 |
| 5. | பின்னர் பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 17.12.2025 |

மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 06/07/2024 நாளிட்ட மனுவை பொதுத் தகவல் அலுவலர், காவல் கூடுதல் ஆணையர், சென்னை மாநகர காவல் (போக்குவரத்து) பிரிவு, வேப்பேரி, சென்னை-7 அவர்களுக்கு அனுப்பி, அதில் “நான் குறிப்பிடும் புகார் மனு 29/05/2023 அன்று போக்குவரத்து காவல் அதிகாரிகள் லஞ்சம் கேட்டு தொந்தரவு செய்து அதற்கு

அளிக்கப்பட்ட புகார் மனு மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்ற தகவலை தரவும்." என்பன போன்று 4 (நான்கு) இனங்களில் தகவல்களை அளிக்கக் கோரியுள்ளார்.

2. இன்றைய (15/07/2026) ஆணையத்தின் விசாரணையின் போது மனுதாரர் திரு.A.சுரேஷ் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில், Dr.J.சிவகுமார், காவல் உதவி ஆணையாளர், மவுண்ட் போக்குவரத்து உட்கோட்டம் அவர்கள் தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள், 2012 விதி 8(2)-ன்படி அங்கீகாரம் பெற்ற பிரதிநிதியாக, நேரில் ஆஜராகி, ஏற்கனவே மனுதாரருக்கு 31/07/2024 மற்றும் 17/12/2025 தேதிகளிட்ட கடிதங்கள் வாயிலாக பதில் அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார். அது குறித்து மனுதாரர் தெரிவிக்கையில், தனக்கு தவறான பதில்கள் அளிக்கப்பட்டுள்ளதாகவும், மேலும், தனது மனுவின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த விவரத்தை இதுநாள் வரை அளிக்கப்படவில்லை என்றும் புகார் தெரிவித்தார். அதற்கு பொதுத் தகவல் அலுவலரின் பிரதிநிதி, நடத்தப்பட்ட விசாரணையில், புகார் நிரூபிக்கப்படவில்லை அதன் காரணமாக அவ்வழக்கு முடித்து வைக்கப்பட்டது என்றார். இரு தரப்பினரின் வாதுரைகளும் கேட்கப்பட்டன. **எனவே, பொதுத் தகவல் அலுவலர்/ காவல் துணை ஆணையாளர், போக்குவரத்து, தெற்கு மண்டலம், புனித தோமையார் மலை, சென்னை-16 அவர்கள் மனுதாரர் அளித்த புகார் மனுவின் நகல், மனுதாரர் அளித்த வாக்குமூலத்தின் நகல் மற்றும் வழக்கின் மீதான இறுதி அறிக்கையின் நகல் ஆகியவற்றினை 31/07/2026-க்குள் மனுதாரருக்கு விரைவு அஞ்சல் வாயிலாக அனுப்பி வைப்பதோடு, அதன் நகல் ஆணையத்திற்கும் அனுப்பி வைக்கப்பட வேண்டுமென்று ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்./-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண்.SA 11714/SCIC/2024</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
காவல் துணை ஆணையாளர்
போக்குவரத்து தெற்கு மண்டலம்
புனித தோமையார் மலை
சென்னை - 600 016.

<u>மேல்முறையீட்டாளர்</u>

திரு.A.சுரேஷ், த/பெ.L.ஆனந்தன் (லேட்)
பழைய எண்.36, புதிய எண்.27
திருநாவுக்கரசு தோட்டம், 1வது முட்டு சந்து
கொருக்குப்பேட்டை, சென்னை-600 021
Cell:99412 80824

RG/Sr.PC